2596 6
XX.A.37
I

:: ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

Roll-118
1252

ஆறாந் தொகுதி.

மஹாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

பத்திராதிபன்:— பண்டித, ஆ. அரங்கராமாநுஜன்.

மதுரை,

ஹரிஸமயதிவாகரம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிரபவ-சுக்கில.

1929-1930.

ஸ்ரீ:

ஆறுந் தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்	எழுதியவர்.	பக்கம்
அந்தர்யாமி:-	ஸ்ரீ. உ. வே. வித்யாரத்நாகர பண்டிதவர நரசிம்ஹாசார்யஸ்வாமி (குடவாசல்) ...	5
அர்த்தவாதம்:-	ப. அ. ...	76
அர்ச்சாவதார வைபவம்:-	ஸ்ரீ.உ.வே. வித்வான் வேங்கடாசார்யஸ்வாமி (சேரன்குளம்)	77, 121, 181, 214, 308
உடையவர் சாரதாபீடத்திற் கெழுந்தருளியது:-	ப. அ. ...	185
எதிராஜாந்தாதி:-	ஸ்ரீ உ. வே. ரெ. இராமையங்கார்ஸ்வாமி தலைமைத் தமிழாசிரியர், ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல், மதுரை. ...	97
ஓர் விஜ்ஞாபனம்:-	,, லக்ஷ்மணையங்கார்ஸ்வாமி பேரையூர்...	49
ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்:-	ப்ரஹ்மஸ்ரீ. V. S. ராமஸாமி சாஸ்திரிகள் B. A; B. L. ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் மதுரை	17, 31, 58, 85, 109, 142, 168, 193, 225, 271, 314
கோயில் மார்கழித்திருநாளின் குறைபாடு:-	T.D. ராமஸ்வாமிநாயுடு Avl. திருப்புறம்பயம் ...	71
ஸ்ரீசரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபை 15, 16-வது வருஷோத்ஸவம்:-	ப. அ. ...	69
ஸ்வாதந்தர்யம்:-	,, ...	221
சில தனிப்பாடல்கள்:-	ஸ்ரீ.உ.வே. ரெ. இராமையங்கார்ஸ்வாமி	236
சென்னை, ஸ்ரீவைஷ்ணவ கான்பிரன்ஸ்:-	ப. அ. ...	252
ஞானப்பெண்:-	,, ...	189
தர்மம்:-	ஸ்ரீ. உ. வே. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ...	21
திவாகரத்தின் ஆறுவதாண்டு:- ...	,, ...	1
திருவள்ளுவர் சமயம்:- ...	,, ...	125
திருமாலிருஞ்சோலைமலை:-	ஸ்ரீ. உ. வே. ரெ. இராமையங்கார் ஸ்வாமி ...	197
திருக்குறள் கடவுள் வாழ்த்து ஆராய்ச்சி:-	ப. அ. ...	263
தீர்க்க சிந்தையந்தீ:-	,, ...	94

தீர்க்க சரணாகதி:- ... ... ப. அ. ... 101

தூத்துக்குடி, ஸ்ரீபாலகிருஷ்ண ஸபை:- ,, ... 284

நசிகேதோபாக்யானம்:- நியாயவேதாந்த வித்வான்
ஸ்ரீ. உ. வே. கோபாலாசார்யஸ்வாமி
மதுரை ஸம்ஸ்கிருதகாலேஜ் 44, 65, 115,
136, 172, 210, 231, 276, 304, 336

நன்கொடை:- ... ப. அ. ... 100, 124, 344

நவராத்ரி மஹோத்ஸவம்:- ,, ... 251

நம்பிள்ளை வைபவம்:- } ஸ்ரீ. உ. வே. ரெ. இராமையங்கார் ஸ்வாமி 253, 317

நவரத்னமாலை:- ... ... ப. அ. ... 285

பருத்திபட்ட பன்னிரண்டும் படுதல்:- ,, ... 28

பன்மணித்திரள்:- ... ... ,, ... 53, 157

பக்தி நிரூபணம்:- ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் சிங்கரா
சார்யஸ்வாமி காரப்பங்காடு 178, 205, 229, 295

ஸ்ரீ பாண்டிய மதுரா தசகோத்ர ஸ்ரீ வைஷ்ணவ ராமாநுஜ ஸித்தாந்த நிர்வாக ஸபை:- } கோமடம் அ. ரா. லக்ஷ்மணையங்கார் ஸ்வாமி ... 282

புண்ய பாப நிரூபணம்:- ... ப. அ. ... 324

மதிப்புரை:- ... ... ,, ... 52, 76, 220

மணக்கால் நம்பியும் ஆளவந்தாரும்.- ,, ... 146

மந்த்ரய உபந்யாஸம்:- ஸ்ரீகோயில் கந்தாடை ஸ்ரீ. உ. வே.
வித்வான் வாதூலதேசிக கந்தாடை
அப்பன் ஸ்வாமி ... 164

யக்ஷப்ரச்நம்:- ... ... ப. அ. ... 94

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை:- ஸ்ரீ. உ. வே.
சிங்கப்பெருமாள் ஸ்வாமி
காரப்பங்காடு ... 10, 38, 60, 119

வானமாமலை, ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தாபிவர்த்தநீ ஸபா:- } ஸ்ரீ. உ. வே. சிரோமணி சடகோபாசார்ய ஸ்வாமி வானமாமலை ... 250

விஜ்ஞாபநம்:- ... ... ப. அ. ... 123

ஆறுந்தொகுதியில் வெளியாகிய புஸ்தக பாரம்
(யாதவாப்யுதயம்) 1, 2, 3, பாரங்கள்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. விபவஹு தைமீ பகுதி ௧.
Vol 6. *January & February 1929.* No. 1.

திவாகரத்தின் ஆறுவதாண்டு.

மூலப்பழமறைக்குமுன்னேயுங்காணலாங்
சாலிக்குப்பின்னேயுங்காணலாம்—மால்யானை
முந்தருளும்வேதமுதலேயெனவழைப்ப
வந்தருளுஞ்செந்தாமரை.

ஸ்ரீயப்தியாகிய ஸர்வேசுவரனது பரமகிருபையால் நமது திவாகரத்தின் ஐந்தாவதாண்டு இனிது நிறைவேறி ஆறுவதாண்டு தொடங்கப்பெறுகிறது. ப்ரபந்நஜனகூடஸ்தராகிய நம்மாழ்வார் "கலியுங்கெடுங்கண்டுகொண்மின்" என்று ஸ்ரீஉடையவரது திருவவதார விசேஷத்தைச் சூசிப்பித்து அவர்காலத்தில் கலியின் க்ரூரத்தன்மை ஒழிந்து விடுமென்று அருளிச்செய்ததற்கேற்ப உடையவர்காலத்தில் நமதுசமயம் உந்நதநிலையுற்று விர்த்தியடைந்திருந்தது. பின் மணவாளமாமுனிகள் காலம்வரையும் அங்ஙனமே யாதொரு குறைவின்றி மேன்மையுற்று விளங்கியது. அதன் பிறகு மேன்மேலும் விர்த்தியடைகிறதென்ற அம்சம் சிறிது சிறிதாகத் தளர்வுறும்பருவமடைந்து தற்பொழுது 'நமது சமயம் விர்த்தியடைகிறது' என்ற சொல்லைக்கேட்பதற்கும் அரிதான நிலைவந்துற்றது. வேதபாஹ்யாதி சமயங்கள் நாளுக்குநாள் கிளர்ச்சியுற்று வருகிற இக்காலத்தில் நமது சமயம் இங்ஙனம் மெலிவுற்றிருப்பது பெரிதும் வருந்துதற்கிடமன்றோ! கூரத்தாழ்வானும், பெரியநம்பி

களும் தரிசனத்திற்காகத் தரிசனத்தையும், திருமேனியையும் கொடுத்தார்களென்றால் அக்காலத்திலுள்ள பெரியார்கட்குச் சமயப் பற்றுஎத்துணைச் சிறப்புடைத்தாயிருந்துளதென்பது விளங்கவில்லையா? இதனுல் தரிசன ஸம்ரக்ஷணமே தமக்குப் பெருவாழ்வாகக்கருதி அதைக்கையாண்டு வந்தார்களென்பது தோற்றுகிறதல்லவா? சமயாசாரத்தில் பற்றுள்ளம் வைப்பதன்றே பரமபுருஷார்த்தத்தைப் பெறுதற்கு முதற்சாதனமாகும். நமது சமயத்தின்பெருமையையும், அதைக்கடைப் பிடித்தொழுகிய பெரியார்களது சீர்மையையும், அவர்கள் சமயத்திற்காக எடுத்துக்கொண்ட பேருழைப்பின் அருமையையும் நாம் மறந்து விடுவோமாகில் வாழ்வதெப்படி? இவற்றையெல்லாம் மறந்திருக்கிற நமக்கு ஞாபகப்படுத்துவதற்கன்றே திவாகரம் தோன்றியது.

இங்ஙனம் ஞாபகசாதனமாயிருக்கிற திவாகரத்தை வைஷ்ணவ சமூகம் ஒருமித்து ஆதரிக்காதிருக்கிற குறைபாட்டை என்னென்போம்? திவாகரத்திற்கே தொண்டுபுரியுங்காலங் கிடைக்கப் பெற்றால் இன்னும் வெளிவராத க்ரந்தங்களை வெளியிடவும், அரியபல விஷயங்களைச் சாவதானமாக ஆராய்ந்தெழுதி யாவருக்கும் எளிதிற் புலப்படும்படி செய்யவும் கூடும். இப்பொழுது திவாகரம் ஒருவரையாவது ஆதரிக்கும் சக்தி தனக்கு முற்றிலுமில்லாததினுல் இதற்கே அற்றுத்தீர்ந்து தொண்டுபுரிதற்கியலவில்லை. இக்குறைபாடு எப்பொழுது நிறைவேறுமோ? ஐந்தாண்டு முடிவாகச் சந்தாதார்களின் மூலமாக ஒருசிறிது லாபமும் காண்கின்றிலோம். "தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன், மெய்வருத்தக் கூலி தரும்" என்பது திவாகர விஷயத்தில் பலித்திலதுபோலும்.

நம் சமூகத்தினர் சிறிதேனும் சிரமப்படாதிருக்கும் முறையில் ஸம்ப்ரதாயத்தை விர்த்திசெய்தற்கு விரகியாதென்று ஆராய்ந்து இப்பத்திரிகை தொடங்கப்பெற்றதாகுமென்று பன்முறை தெரிவித்துள்ளோம். அவ்வறிவிப்பு கடலொலிபோல் வீணுயிற்றேயன்றிப் பயனுடைத்தாகவில்லை. சமூகத்தினர் பலரும் இதை ஆதரிக்க முன்வந்தார்களில்லை. முன்வந்திருப்பார்களாகில் இது, மஹோந்நத நிலையில் விளங்கும். இக்காலத்தில் இதற்காக வருஷத்

திற்கு இரண்டு ரூபா கொடுத்துதவுதல் ஒருபெரியகாரியமென்று சொல்லமுடியுமா?

இந்த நிலைமையில் திவாகரம் நிலைவுற்று விளங்குதற்குச் சிலர் ஸம்ரக்ஷகராகவும், போஷகராகவும், ஜீவித சந்தாதார்களாகவும் சேர்ந்து உபகரித்த உபகாரமே முக்யகாரணமாகும். சென்ற ஆண்டு முடிவாகத் திவாகரத்திற்கு ஸம்ரக்ஷகராகச் சேர்ந்தவர் நால்வரும் போஷகராகச் சேர்ந்தவர் இருவரும் ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்தவர் எண்பத்தறுவரும் ஆகத் தொண்ணூற்றிருவராவர். இவர்களால் இதுவரை வசூலான ரூபா 1517 இனி வசூலாகவேண்டிய ரூபா 1133. மேலும் பலர் ஸம்ரக்ஷகர்கவும், போஷகராகவும், ஜீவித சந்தாதார்களாகவும் சேர்ந்துதவிபுரிவார்களாகில் சாதாரண சந்தாதார்களின் கைபார்த்து வாழ்கிற கவலையகன்றுவிடும். இன்னும் இரண்டுவருஷத்திற்குள்ளாக நானூறு ஜீவித சந்தாதார்கள் எவ்வாருவது சேர்த்துவிடல்வேண்டுமென்று முயன்றுள்ளோம். எல்லா அபிமானிகளும் அம்முயற்சி பயனெய்துமாறு உபகரிக்கவேண்டுகிறோம்.

பத்திரிகைக்கு ஏதேனும் ஆதாரமில்லாமல் வெறும்ஆடம்பரஞ் செய்தல் தகுதியில்லை என்ற கருத்தால் சிலவாண்டுகள் பத்திரிக்கைக்கு: வருஷோத்ஸவஞ்செய்யப்பெருமற் கழிந்தன. சென்ற ஐந்தாவதாண்டு நிறைவுவிழா திருவரங்கம் பெரியகோயிலில் விபவஸு மார்கழிமீ 9உ (23—12—28)யன்று தாயார் ஸந்நிதி முன்மண்டபத்தில் திருமழிசை ஸ்ரீ. வே. திருவாழி ஸ்ரீரங்காசார்யஸ்வாமியின் அக்ராஸநாதிபத்யத்தில் மிகவும் விமரிசையாய் நடைபெற்றது. அக்காலத்து ஸ்ரீரங்கம் தென்னுசார்ய ஸம்ரக்ஷண ஸபையின் வித்வாஞ்க எழுந்தருளியிருக்கிற நியாயவேதாந்த வித்வான் ஸ்ரீ. உ வே. ரங்கஸாமி ஐயங்கார்ஸ்வாமி "அர்ச்சாவதாரம்" என்ற விஷயத்தைக்குறித்து சுருதி ஸ்மிருதி இதிஹாஸ முதலியவைகளிருந்தும், ஆழ்வாராசார்யர்களின் அருளிச்செயலிலிருந்தும் பலசான்றுகளெடுத்தோதி மிகவும் விமரிசையாக உபந்யஸித்து முடித்தார். அதன்மேல் திவாகரத்தைக்குறித்துப் பிரஸ்தாபிக்கத் தொடங்கிய சமயத்தில் திவாகரம் உபயவேந்த பாரங்கதராய் எழுந்

தருளியிருக்கிற (காரப்பங்காடு) சிங்கப்பெருமாள் ஸ்வாமி முதலானவர்களின் அரியபெரிய விஷயதானங்களைப்பெற்று விளங்குகின்றதினால் பலருக்கும் அறிவின்மிகுதியை அளிக்கிறது. ஆதலால் இதுமேன்மேலும் விர்த்தியடையுமாகில் பலருக்கும் பேருபகாரமாயிருக்குமென்று பாராட்டியருளினர்.

அதன்பிறகு அக்ராஸநர் உபந்யாஸகரின் ஆற்றலைபெடுத்துரைத்து ஸபையோர்களைநோக்கி இந்தத் திவாகரத்தின் வருஷப் பூர்த்தி இவ்விடத்தில் நடைபெற்றதைக் குறித்துப்பெரிதும் சந்தோஷிக்கிறோம்; இனிமேலும் திவாகரத்தின் ஆண்டு நிறைவுவிழாவை இவ்விடத்திலே நடத்தவேண்டியதும் அவசியமேயாம்; இது நிற்க, திவாகரம் எங்கள் போன்றவர்களாலும் ஆதரிக்கத்தக்கதாயிருக்கின்றதினால் எல்லோரும் இதையாதரித்து விர்த்திசெய்தற்குக் கடமைப்பட்டவராவார்களென்று நயம்பெறவுரைத் தருளிப்பூர்த்தி செய்தார். அப்பொழுது (Retired) டிப்டிகலெக்டர் ஸ்ரீ. உ. வே. சடகோபாசார்ய ஸ்வாமி முதலான ப்ரமுகர்கள் விஜயஞ்செய்து உபந்யாஸத்தையும், அக்ராஸநர் முடிவுரையையுங் கேட்டுக் களிப்புற்றுச்சென்றார்கள். இங்ஙனம் வருஷப்பூர்த்தி இனிது நிறைவேறியது. திவாகரம் பெரிதும் ஆக்கமுற்று விளங்க எம்பெருமான் அநுக்ரஹிப்பானாக.

இப்பொழுது சந்தாதார்களாகச்சேர்ந்திருப்பவர்கள் ஜீவித சந்தாதார்களாகச்சேர்ந்து கொண்டால் பெரிதும் உபகாரமாயிருக்கும் ஜீவித சந்தாவுக்குரிய ரூபாவை ஒருமுறையிற் கொடுக்கவேண்டுமென்ற நிர்பந்தமில்லை. ஒரு வருஷத்திற்குள் பலமுறையாகக்கொடுத்தாலும் பெற்றுக்கொள்கிறோம். இதற்குச் சக்தியில்லாதவர்கள் சக்தியுடையவர்களைச் சந்தாதார்களாகச் சேர்ப்பிப்பதோடு இந்தப் பத்திரிகை கிடைத்தவுடன் பெரிதும் தயைசெய்து தங்கள் சந்தாப் பணத்தை மணியார்டர் மூலமாக அனுப்பப் பிரார்த்திக்கிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

அந்தர்யாமீ.

[வித்யா ரத்னகர பண்டிதவர ஸ்ரீ. உ. வே.
வி. ஆர். நரஸிம்ஹாசார்யஸ்வாமி எழுதியது]

(ஐந்தாந்தொகுதியின் 209-ம் பக்கத்தொடர்ச்சி.)

நமது அநுபவத்திற்கண்ட மற்றொரு அதிசயத்தைக் கூறுவாம். ஒருபெரியார் பித்ருதினத்தன்று தமது சீடரொருவரை அழைத்துக் காய்கறிவாங்கிவரும்படி விவரமாகச்சொல்லியனுப்பினர். சீடரும் பதார்த்தங்களை வாங்கிவந்து ஆசிரியர் முன்கொணர்ந்து வைத்தார். குரு அதைப்பார்த்துவரும்போது அவற்றுள் கருணைக்கிழங்கிருப்பதைக்கண்டு ஏனடா! சேப்பங்கிழங்கல்லவோ வாங்கவேண்டும்; கருணைக்கிழங்கை வாங்கி வந்தாயே என்றார். சீடர் தாங்கள் கட்டளையிட்டதைத்தான் செய்திருப்பேனென்றார். ஆசிரியர் அடா! கருணைக்கிழங்கையா சிராத்தத்திற்கு யான் வாங்கிவரச்சொல்வேன் என்றார். சீடர் ஆமாம். தங்களுக்கு அது தெரியாததல்ல. சேப்பங்கிழங்கென்றுதான் சொல்லியிருப்பீர்கள்; அப்படியானல் இது (கருணைக்கிழங்கைச் சுட்டிக்காட்டி) சேப்பங்கிழங்காகவே யிருந்தாகவேண்டும்; எவ்வகையிலும் அடியேன் தேவரீரது கட்டளையைக்கடுகளவும் கடக்கமாட்டேனென்றார். இவ்வாறு பிதற்றலெல்லாம் துருதுருத்த தார்க்கிக தர்த்தரூகத்தின் முக்காரங்களென்று பரிஹஸிக்கின்றனர் பிறர்.

நல்லது இவ்வர்ணனையைவிடுத்துப் பிரகிருதத்தை நாடுவோம். முதலில் இங்குத் தார்க்கிகர்கள் சொல்லிய லக்ஷணம் ஸரியானதல்லவென்பதைக்காட்டுகிறோம். இந்திரியங்கட்கு அமைபபிடமென்றது விருக்ஷம், லதை முதலிய ஸ்தாவர சரீரத்திற்குச் சேருவதில்லை. இதனலே போகாயதனமென்பதும் பழுதேயாகின்றது. இந்திரியங்கள் அமைக்கப்பெறாத சரீரத்தினல் போகம் எப்படிக் கூடும்? இந்திரியம், விஷயங்களை நுகர்வதுதானே போகமென்பது. அது பொறிகளைப்பெறாத சரீரத்தைக்கொண்டு பெறலாகுமோ?

இவை ஈசுவர சரீரம், முக்தர்களின் சரீரம் இவற்றிற்குப் பொருத்தமானவையல்லவென்பதையோ சொல்லத்தேவையில்லை. ஆதலால் ச்ரோத்ரியர்களான நமது பூர்வாசார்யர்கள் சாஸ்திரங்களினும் அதற்கு அநுஸாரிகளான யுக்தி அநுபவங்களினாலும் ஸர்வப்பிரபஞ்சங்களையும் பரமாத்மாவுக்குச் சரீரமாயும், அப்பரமாத்மாவை இவற்றிற்கெல்லாம் அதிஷ்டாதாவான ஒருயிராகவும் அறிந்துகொண்டு அவனது சரீரமேயான ஜீவராசிகளுட்பட்ட ஸர்வப்பிரபஞ்சங்கள் ஜீவர்கள் தம்மவையான தேவமநுஷ்ய பசுபக்ஷி விருக்ஷ குல்ம லதா விதாநாதிகளான ஸர்வசரீரங்கள் இவற்றிலெல்லாம் பொதுவாகப் பொருந்தும்படியான சாஸ்திரீயமான சரீரலக்ஷணமொன்றனை நிர்ணயித்திருக்கின்றனர். அதுவருமாறு:—

"யஸ்யசேதநஸ்ய யதவஸ்தம் த்ரவ்யம் யாவத்ஸத்தம் அஸம்பந்தாநர்ஹம் ஸ்வசக்யே நியந்தவ்ய ஸ்வபாவஞ்ச தத்தஸ்ய சரீரம்" எந்த சேதநனுக்கு யாதாமொரு தசாவிசேஷத்தைப் பெற்றிருக்கிற எப்பொருளானது தானுள்ளவரை அச்சேதநனைவிட்டு விலகி நிற்கமாட்டாததோ தன்னாலாகுந் தொழிலில் அவனால் நியமிக்கப்படும் தன்மையதோ அப்பொருள் அந்தச் சேதநனுக்குச் சரீரமாகுமென்பது இதன் திரண்டபொருள். இந்த லக்ஷணத்தை நமது சரீரத்திலேயே பொருத்திப் பார்த்துக்கொள்ளலாம். சேதநராகிய நமக்கு கைகால் முதலான பற்பல உறுப்புக்களமைந்தவொரு தசையைப்பெற்றிருக்கிற இம்மாநுஷ. தேஹமானது நாமுள்ளவரை நம்மை (ஜீவனை) அன்றி ஒருக்ஷணமும் தனித்துநிற்கமாட்டாததாயும் தன்னாலாகுந் தொழில் நம்மாலேவக்கூடிய நிலைமையினுள்ளதாயுமிருப்பதால் இது நமக்குச் சரீரமாகின்றது.

இப்படி ஸூக்ஷ்மமாகவோ ஸ்தூலமாகவோ எத்தெசையையேனும் பெற்றிருக்கிற எப்பொருளேயாயினும் அது பரமாத்மாவின் ஆதாரமின்றி நிற்கும் நிலையற்றதாய்த் தன்னாலியன்ற செயலில் அவனாலிசைக்கப்படுவதாயிருப்பதுபற்றி அவனுக்குச் சரீரமாகிறது. ஆகவே சுருக்கிச்சொல்லில் ஆதேயத்வ, விதேயத்வ, சேஷத்வங்கள் சரீரலக்ஷணம் என்றதாகும். எனவே ஆதாரனாயும் நியந்தாவாயும் ஸ்வாமி (சேஷி)யாயுமிருக்குமது ஆத்மா, ஆதேய

மர்யும் நியாம்யமாயும் சேஷமா (ஸொத்தா)யுமிருக்குமது சரீர மென்றதாயிற்று. குறையற்ற ஸுஷ்டுவான இச்சரீரலக்ஷணம் ஜீவன் ஈசுவரன் என்கிற வாசியற ஸர்வசரீரங்களிலும் ஸரளமாகப் பொருந்துவதைப் பார்த்துக்கொள்ளலாம்.

ஆகவே லக்ஷணங்கூடிவராததினுல் பிரபஞ்சத்தைப் பரமாத்மாவின் சரீரமென்னக்கூடாதென்பது மூடர் சொல்லேயாம். பரமாத்மாவுக்குச் சரீரமில்லையென்கிற சாஸ்திரவசனங்களெல்லாம் கர்மாதீனமாய் இன்பதுன்பங்களை நுகருதற்குரியதாய், ஸ்வேச்சையல்லாமல் கட்டாயமாய்வருவதாய், பசி தாஹம் பிணி மூப்புச் சாக்காட்டிற் குடன் பட்டதாயுமிருக்கின்ற நம்போலியாது பிராகிருத சரீரம்போன்ற சரீரம் ஈசுவரனுக்கில்லை யென்ற பொருள் சொல்லாமலே விளங்கும்.

"அஜாயமாநோ பஹுதா விஜாயதே" கர்மாதீனமாகப் பிறவாதவனேயாகிலும் தன் கருணைப்பெருக்கெடுத்துப் பல்லாயிரவிதமாகப் பிறக்கின்றுனவன். "ஸம்பவாமி" "ஆத்மமாயயா" எனது ஸங்கல்ப்பத்தினுலேயே நான்பிறக்கிறேன். "அஜோபிஸந்" ஆனுலும் நான் பிறப்பற்றவ்னேதான். "நதஸ்ய ப்ராக்ருதாமூர்த்தி:" அவன் திருவுருவம் ஸாமாந்யமானதல்ல. "பச்யதி அசக்ஷு:ஸ: ச்ருணோதி அகர்ண:" அவன் கண்ணில்லாமலே பார்க்கிறுன்; காதில்லாமலே கேட்கிறுன்; ஆதலால் இவற்றிற்காக (காண்பது கேட்பது முதலிய வற்றிற்காக) அவனுக்குச் சரீரம் வேண்டுமென்பதில்லை.

"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை இனியாமுறுமை உயிரளிப்பான், எந்நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்" என்பதனுல் இச்சிக திவ்யமங்கள விக்ரஹங்கள் பலவற்றின்யோகம் அவனுக்குண்டாமென்பது பெறப்பட்டது. ஆனுல் ஸர்வப்பிரபஞ்சங்களும் அவனுக்குச் சரீரம் என்பதில் என்னவிசேஷமிருக்கிறது? ஹேயமாய் துக்காகரமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிற இப்பிரபஞ்சம் அவன்திறத்தில் மட்டும் எப்படி சிலாக்கியமாய் துன்பந்தராததாயிருக்கும்? என்கிற சங்கைக்கு நாம் அநுபதம் தொடங்கப்போகிற பிரயோஜன கதனுவஸ

ரத்தில் (ஈசுவரன் சரீரியாயிருப்பதற்குப் பயன்களை விளக்குமிடத்து) ஸந்தேகமறஸமாதானத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

நண்பர்களே! இதுவரை நாம் செய்துள்ள விசாரணையினல் பிரபஞ்சேசுவரர்களுக்குச் சரீர சரீரிபாவம் (ஈசுவரன் எப்பொருள்கட்கும் ஒருயிராயிருக்கை) பொருத்தமுள்ளதேயென்றும், அச்சரீராத்மபாவம் இத்தகையதென்கிற அதன் லக்ஷணமும், அதற்குப் பிரமாணமும் நன்கு விளக்கப்பட்டன. இனி இச்சரீராத்மபாவத்தால் ஸித்தமாயுள்ள பிரயோஜனங்களையும், இதனைத்தெரிந்து கொள்வதன் மூலம் யாம் ஸாதித்துக்கொள்ளவேண்டிய பிரயோஜனங்களையும் இங்குச்சுருக்கிச்சொல்வோம்.

முதலாவதாக "தம்விநா த்ருணுக்ரமபி நசலதி" (அவனையின்றி ஓர் அணுவும் அசையாது) என்றபடி சேதனுசேதனரூபமான ஸமஸ்த ப்ரபஞ்சமும் ஈசுவரனுக்கே அதீனமாயிருப்பதாகப் பிரஸித்தமாயிருக்கின்றதே. இப்பிரஸித்தி அவன் ஆத்மாவாயும் பிரபஞ்சம் சரீரமாயுமிருப்பதினுற்றுன் உறுதிபெறுகிறது. ஒரு தேஹம் உருப்பெற்று நீடித்து நிற்பதற்கு அதனுளடங்கியிருக்கிற ஜீவாத்மாவின் ஸ்வரூபமேகாரணமாகிற தென்றும், அந்த ஜீவஸ்வரூபமில்லையானல் அந்தச் சரீரமும் உருமாறி அழிந்துவிடுகிறதென்றும் அநுபவத்தில் தெரிந்த விஷயம். இதுபோல் ஈசுவரனில்லை என்று வைத்துக்கொண்டு பார்த்தால் பிரபஞ்சமும் உருப்பெற்று நிலைத்திருக்காதென்றேதான் கொள்ளவேண்டும். ஆக ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வங்களென்று சொல்லிய சரீரலக்ஷணத்தில் ஆதேயத்வம் என்பது இதுவேதான். ஸ்வரூபாதீக ஸத்தா ஸ்திதிகத்வம் ஆதேயத்வம் அஃதாவது யாதாமொரு வஸ்துவின் ஸத்தா ஸ்திதிகள் மற்றெந்தவஸ்துவின் ஸ்வரூபத்திற்கு அதீனமாயிருக்கின்றனவோ அவ்விரண்டுள் முந்தியது ஆதேயம். மற்றையது ஆதாரம். இதனை ஒருதேஹம் அதைத்தாங்கி நிற்கும் ஒரு ஜீவன் இவற்றினிடத்தில் உதாஹரித்துப்பார்த்துக்கொள்ளலாம்.

இவ்விதம் ஜகதாதாரத்வம் ஈசுவரன் ஸர்வசரீரியாயிருப்பதினலே ஸித்திக்கின்றதினல் அதற்கு இதுவே முதல்தரமான பிர

யோஜனமென்னலாம். அப்படி அவன் உயிராயில்லாவிடில் உலகம் உயிரை இழந்த உடலேபோல உருமாறி அழிந்தேவிடுமன்றோ! அவ்வாறின்றி உலகம் தன்னுருப்பெற்று நிலைத்திருப்பது ஒன்றே முதல்தரப் பிரயோஜனமாமன்றோ!

இப்படியே ஸர்வப்ரபஞ்சங்களையும் ஈசுவரனொருவனே நியமித்துக்கொண்டு ஆள்கின்றானென்பதும் இச்சரீராத்மபாவத்தினாலேதான். இச்சாதீன சத்தா ஸ்திதி ப்ரவர்த்தகத்வம் என்ற தர்மம் எவனுடையதோ அவன் நியாமகன். நியாம்யத்வம் அல்லது விதேயத்வம் என்ற தர்மம் எவனுடையதோ அவன் நியாம்யன். இதனை ஒரு பிரபு அவருடைய பிருத்யர் இவர்களிடம் உதாஹரணமாகக் கண்டுகொள்ளலாம். இந்த விதேயத்வமும் சரீரலக்ஷணத்திலடங்கியிருப்பது ஞாபகத்திலிருக்கிறதன்றோ! இப்படியே பகவான் ஸர்வப்பிரபஞ்சத்திற்கும் ஸ்வாமி; பிரபஞ்சமெல்லாம் அவனுடைய ஸொத்து; என்கிற பிரபஞ்ச ஈசுவரர்கட்குள்ள சேஷசேஷிபாவமும் இதனையுட்கொண்டிருக்கிற சரீர சரீரிபாவத்தினாலேதான்; என்பதையுங்கண்டுகொள்வது.

இப்படி ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வங்களடங்கிய சரீரபாவத்தைப் பிரபஞ்சங்களில் தெரிந்துகொண்டு இவற்றிற்கு எதிரிடையான ஆதாரத்வ நியாமகத்வ சேஷித்வங்களைக் கொண்டிருக்கிற ஆத்மபாவத்தைப் பரமாத்மாவிடத்தில் அறிந்துகொண்டிருப்பவர் "நானுன்னையன்றியிலேன்" என்கிறபடியே அவனுடைய ஸத்தையினாலேயே தனக்கு ஸத்தை (இருப்பு) என்றும், "அதுவுமவனதின்னருளே" என்கிறபடியே அவனது வியாபாரத்தினாலே தனது உபாயாதி வியாபாரமென்றும், "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே, எனக்கே கண்ணனையான் கொள்சிறப்பே" என்கிறபடியே அவன் பிரயோஜன விஷயமாகத் தனக்குப் பிரயோஜனமென்றும் தெளிந்து நிர்ம்மராய் வர்த்திப்பாரென்னுமிது இதன் ஞானத்தினால் ஸாத்யமானதோர் பிரயோஜனம் என்பதை நன்றாக ஆலோசித்துத் தெரிந்துகொள்க.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(5-ம் தொகுதியின் 183-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஏகாதசி சிராத்த விஷயம்.

ஸ்மிருதி புராணங்களுள் ஆசாரப்ரதிபாதநத்தில் இதம்பரப்ரவ்ருத்தைகளான ஸ்மிருதிகளில் காட்டிலும் ததநதிகிருதங்களான புராணங்கள் ஆசாரவிஷயத்தில் துர்ப்பலங்களாகையாலே ஸ்மிருதிகளில் ஏகாதசி சிராத்தம் பண்ணலாமென்றிருப்பதால் ஏகாதசியில் சிராத்தம் பண்ணலாமென்று சில ஸம்பிரதாயஸ்தர்கள் சொல்லுகிறார்கள்.

இதற்கு ஸமாதானம் பின்வருவது கண்டறியத்தக்கது. சாரீரகமீமாம்ஸையில் இரண்டாவது அத்தியாயத்தின் ப்ரதமபாதத்தின் ப்ரதம ஸூத்ரத்தில் "𑌨𑌾𑌨𑍍𑌯 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯 𑌨𑌵𑌕𑌾𑌶𑌦𑍋𑌷 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍" "நாந்ய ஸ்மிருத்ய நவகாசதோஷ ப்ரஸங்காத்" என்கிற ஸூத்ர வ்யாக்யாநத்தில் ஸ்ம்ருதிகள் ஆசாரவிஷயத்தில் ப்ரமாணமாவதுபோலே தத்வவிஷயத்திலும் ப்ரமாணமாகலாம் என்று நிரூபித்திருப்பதுபோல் தத்வப்ரதிபாதகங்களான இதிஹாஸ புராணங்களும் பகவதாராதனரூபமான கர்மப்ரதிபாதநத்திலும் இதம்பரப்ரவிருத்தங்களாகையாலே ஆசாரவிஷயத்திலும் ப்ரமாணமாகலாம்; மேலும் ஆசார ஸாமாந்யாதிக்ருதஸ்ம்ருதிகளிற்காட்டிலும் விசிஷ்டாதிகாரிகளுடைய ஆசார ப்ரதிபாதகங்களான புராண வசனங்கள் ப்ரபலங்கள்.

விசிஷ்டாதிகாரிகளாவார் பகவதாராதனபூதகர்மாநுஷ்டாதாக்கள். ஹரிதினதிலகத்திலும் "[illegible]

க்ஷதிவாஸக்ருதிநஃ "ஸவஷ்யோஸந்தி விஃம்" "பௌராணிக்யாது ருக்மாங்கத சரித முகப்ராப்த கத்யா பதவ்யா சுத்தாம் ஸித்தாந்த யந்த: கதிசநக்ருதிந: ஸர்வதோஸந்தி வித்தம்" என்கிற சுலோகத்தில் "புராணத்தில் ருக்மாங்கத சரிதத்தால் ஏற்பட்டிருக்கிற மார்க்கத்தாலே தசமீவித்தையான ஏகாதசியை சில ப்ராஜ்ஞர்கள் விடுகிறார்கள்" என்று தேசிகன் அருளிச்செய்திருக்கிறபடியால் ஸ்மிருதிகளில் ஏகாதசியில் தசமிவேதை தோஷமன்று என்று சொல்லுகிற பாகத்திற்கு புராணத்தால் பாதம் ஸூசிதமாகிறது.

மேலும், பாஞ்சராத்ரம் வேததுல்ய ப்ரமாணமாகையால் அந்த பாஞ்சராத்ரத்தில் ஏகாதசி சிராத்தம் கூடாதென்பது ஸ்பஷ்டம். வைதிகஸார்வபௌமர் தசநிர்ணயி என்கிற கிருந்தத்தில் ஸ்ரீ ஜயந்தி நிர்ணயத்தில் ராத்ரி பாரணவிஷயத்தில், ஸ்மிருதி விருத்தமாகையாலே ராத்ரி பாரணம் கூடாதென்று ஆக்ஷேபித்து, புராணங்களில் ராத்ரி பாரணம் முக்கியம் என்று சொல்லியிருபபதால் ஆசாரவிஷயத்தில் ஸ்மிருதிகளைப்போல புராணங்களும் பிரமாணமாகுமென்பது. "ஸ்மார்த்தீவ ஸ்மருதேஸ்ச விஃம்" "ஸ்மரந்திச ஸ்ம்ருதே:ச்ச ஸித்தம்" என்றும், மேலும் பாஞ்சராத்ரம் வேததுல்ய ப்ரமாணமாகையால் அந்த பாஞ்சராத்ரத்தில் ஸ்ரீ ஜயந்தியில் ராத்ரி பாரணம் முக்யமென்றிருப்பதால் ராத்ரி பாரணம் ஆவசியகமென்றும் நிரூபித்திருக்கிறார். ஆனால் ஏகாதசி சிராத்தம் அவசியம் கர்த்தவ்யம் என்று அவர் நிரூபித்திருப்பது கூடுமோவென்னில், அபிநிவேச விசேஷமானது ஸ்வவசனங்களில் பூர்வோத்தர விரோதத்தைக்கூட மறக்கும்படி செய்யுமென்பது. "அபிநிவேஶவஶீக்ருத சேதஸாம்" "அபிநிவேசவசிக்ருத சேதஸாம்" இத்யாதி ப்ரமாணங்களாலறியத்தக்கது.

ஸ்மிருதியிலும் ஏகாதசியில் ஏற்பட்ட சிராத்தத்தை த்வாதசியில் பண்ணவேண்டுமென்பதாகச் சொல்லியிருக்கிறது. பிருஹத்தாரித ஸ்மிருதியில் "ஸூதகாதௌயதா ஶ்ராத்தம் ஸூதகாந்தே விதீயதே। ததைவைகாதஶீ ஶ்ராத்தம் த்வாதஶ்யாமேவ காரயேத்॥" "ஸூதகாதெளயதா ச்ராத்தம் ஸூதகாந்தே விதீயதே, ததை

வேகாதசீ ச்ராத்தம் த்வாதச்யாமேவ காரயேத்" என்று ஏகாதசி சிராத்தத்தை த்வாதசியிற் செய்யும்படி சொல்லியிருக்கிறது.

ஹாரீதஸ்மிருதியில் "பித்ரோ: ஶ்ராத்தம் நகுர்வீத ஏகாதஶ்யாம் த்விஜோத்தம:। த்வாதஶ்யாம் தத்ரகுர்வீத நோபவாஸதிநேக்வசித் ॥ ஏகாதஶீ திநே ப்ராப்தே மாதாபித்ரோர்ம்ருதே அஹநி ॥ தத்திநம் து பரித்யஜ்ய த்வாதஶ்யாமேவ காரயேத்" "பித்ரோ ச்ராத்தம் நகுர்வீத ஏகாதச்யாம் த்விஜோத்தம, த்வாதச்யாம் தத்ரகுர்வீத நோபவாஸதிநேக்வசித், ஏகாதசீதிநே ப்ராப்தே மாதாபித்ரோர்ம்ருதே அஹநி, தத்திநம்து பரித்யஜ்ய த்வாதச்யாமேவ காரயேத்" என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் விஜ்ஞாநேசுவர பரப்ருதிகளால் உதாஹரிக்கப்பட்டிருக்கிற ஏகாதசி சிராத்த கர்த்தவ்யத்வ ப்ரதிபாதக வசநங்களுக்கும் ஏகாதசி சிராத்தம் கர்த்தவ்யமன்று என்றேற்படுகிற வசனங்களுக்கும் ஸ்மார்த்த வைஷ்ணவரூப அதிகாரி பேதத்காலே வ்யவஸ்தை காலாதர்சம் முதலான கிருந்தங்களில் பண்ணியிருப்பதால் விரோதமில்லை.

மேலும் ஏகாதசீ தினத்தில் அந்நமானது பாபத்திற்கு ஆசிரயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிருஹ்மகைவர்த்தத்தில், "ந கேவலம் ஸ அகம் புங்க்தே யோ புங்க்தே ஹரிவாஸரே ॥ திநே அத்ர ஸர்வ பாபாநி பவந்த்யந்நஸம்ஸ்திதாநி து। யாநி காநி ச பாபாநி ப்ரஹ்மஹத்யாஸமாநி ச ॥ அந்நமாஶ்ரித்ய திஷ்டந்தி ஸம்ப்ராப்தே ஹரிவாஸரே" "நகேவலம் அகம புங்க்தே யோபுங்க்தே ஹரிவாஸரே, திநே அத்ரஸர்வ பாபாநி பவந்த்யந்நஸ்திதாநிது, யாநிகாநீச பாபாநி ப்ருஹ்மஹத்யாஸமாநிச, அந்நமாச்ருத்ய திஷ்டந்தி ஸம்ப்ராப்தே ஹரிவாஸரே" என்பதால் ஏகாதசியில் ப்ருஹ்மஹத்திக்கு ஸமமான பாபங்கள் அந்நதை ஆசிரயித்திருக்கின்றனவென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் ஏகாதசியில் பிதிர்க்களுக்கே அந்நம் கெர்ஹிதமென்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஏகாதஶ்யாம் து பித்ரூணாம் தத்தம்

துர்க்கதி ஸாதநம்॥ கர்ஹிதாந்நம் நசாஶ்நந்தி பிதரஶ்ச திவௌகஸ꞉। மத்யபாநம் நரஶ்ரேஷ்ட பீத்வைகோ நரகம் வ்ரஜேத்॥ ஏகாதஶ்யாம் து காமேந பித்ருபிஸ்ஸஹ மஜ்ஜதி” “மாத்ருபர்த்ருபித்ருணும் ததஅந்நம் துர்க்கதி ஸாதநம், கர்ஹிதாந்நம் நசாச்நந்தி பிதர:ச திவௌகஸ:, மத்யபாநம் நரச்ரேஷ்ட பீத்வைகோ நரகம் வ்ருஜேத், ஏகாதஸ்யந்த காமஸ்து பித்ருபிஸ்ஸஹமஜ்ஜதி” என்பதனல், மத்யபாநம் பண்ணினவன் தானெருவன் நரகத்திற்குப் போகிறுன். ஏகாதசியில் போஜனம் பண்ணினவன் தன்னுடைய பிதிர்க்களோடே நரகத்தில் முழுகுகிறுன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே, “புங்க்ஷ்வ புங்க்ஷ்வேதி யோ ப்ரூயாத் தமாஹுர் ப்ரஹ்மகாதகம்” “புங்க்ஷ்வபுங்க்ஷ்வேதியே ப்ரூயாத் தமாஹுர் ப்ருஹ்ம காதகம்” என்பதனல் ஏகாதசியில் யாவனெருவன் ஒருவனை போஜனம் பண்ணும்படி சொல்லுகிறுனே அவன் ப்ருஹ்மஹத்தியைப் பண்ணுகிறவனுகச் சொல்லப்படுகிறுன். ஆதலால் கர்த்தா போக்த்தா இருவருக்கும் பிரத்தியவாயமேற்படுவதால் ஏகாதசி சிராத்தம் ஸர்வ ப்ரகாரத்தாலும் நிஷித்தமென்றேற்படுகிறது.

ஆனல் பாரதத்தில் “அஷ்டௌதாந்ய வ்ரதக்நாநி ஆபோ மூலம் க்ருதம் பய꞉। ஹவிர் ப்ராஹ்மணகாம்யா ச குரோர்வசநமௌஷதம்” “அஷ்டௌதாந்ய வ்ருதக்நாநி ஆபோமூலம் க்ருத: பய:, ஹவி: ப்ராஹ்மணகாமாய குரோர்வசந மௌஷதம்” என்பதனல் வ்ருததினங்களில் தீர்த்தம் கிழங்கு நெய் பால் ஹவிஸ்ஸு நிமித்துணம் ஆசார்யநியமநம் ஔஷதம் இவைகளேற்பட்டால் உபவாஸமில்லாமலிருந்தாலும் ப்ரத்தியவாயமில்லை என்று சொல்லியிருப்பதால் ஏகாதசி சிராத்தம் பண்ணலாமென்னில், ‘அவ்ருதக்நாநி’ என்று சொல்லியிருப்பதால் ஏகாதசி வ்யதிரிக்த வ்ருததினங்களில் சரிதார்த்தமாயிருப்பதால் ஏகாதசி சிராத்த நிஷேத வசநங்களுக்கு விரோதமாகாது.

இதுநிற்க, ஏகாதசியில் ஏகோத்திஷ்டம் ஏற்பட்டாலும் அதையும் மறுநாளே செய்யவேணுமென்பது ப்ரமாணஸித்தம். "𑌆𑌦𑍍𑌯𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌹𑌰𑌿𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 𑌯𑌦𑌿 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍋𑌹𑌿𑌤𑌃। 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑌾 𑌚 𑌉𑌭𑍌 𑌨𑌿𑌰𑌯𑌪𑌾𑌤𑌿𑌨𑍌" "ஆத்யச்ராத்தம் ஹரிதிநே யதி குர்யாத் விமோஹித:, கர்த்தா ப்ரதிக்ரஹீதாச உபௌநிரய பாதிநௌ" என்பதனல் ஏகாதசியில் ஏகோத்திஷ்டம்வந்தால் அதை மறுநாள் செய்யவேணுமென்பதறியாமல் ஏகாதசியில் செய்தால் அதன் கர்த்தாபோக்தா இவர்களெல்லாரும் நரகத்தில் விழுகிறுர்கள் என்று பாரத்வாஜர் சொல்லியிருக்கிறுர்.

போதாயநரும், "𑌆𑌦𑍍𑌯𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌹𑌰𑌿𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 𑌯𑌦𑌿𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍॥ 𑌪𑌿𑌣𑍍𑌡𑌮𑍇𑌕𑌂 𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌾𑌥 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍" "ஆத்ய ச்ராத்தம் ஹரிதிநே யதிஸ்யாத் தந்நகாரயேத், பிண்டமேகம் ப்ரதாயாத த்வாதச்யாம் ச்ராத்த மாசரேத்" என்பதனல் ஏகாதசியில் ஏகோத்திஷ்டம் நேர்ந்தால் அன்று ஏகபிண்ட ப்ரதாநம்பண்ணிவிட்டு மறுநாளில் ஏகோத்திஷ்ட சிராத்தம் பண்ணவேணுமென்று சொல்லியிருக்கிறுர்.

'ப்ருஹத்ப்ரசேதஸ்' என்பவரும் "𑌆𑌦𑍍𑌯𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌮𑌪𑌿𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌹𑌰𑌿𑌵𑌾𑌸𑌰𑍇॥ 𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍈𑌕𑌂 𑌤𑌦𑌾 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌪𑌰𑍇𑌹𑌨𑌿 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍॥ 𑌏𑌕𑌾𑌦𑌶𑍇 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍇𑌵𑌾 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍॥ 𑌏𑌕𑌾𑌦𑌶𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌯𑍋𑌃 𑌵𑌿𑌶𑍇𑌷𑍋 𑌨𑌹𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇" "ஆத்ய ச்ராத்த மபித்யாஜ்யம் ஸம்ப்ராப்தே ஹரிவாஸரே, ப்ரதாயைகம் ததாபிண்டம் பரேஹ்நி சிராத்த மாசரேத், ஏகாதசே த்வாதசேவா ச்ராத்த மாத்யம் ஸமாசரேத், ஏகாதசத்வாதசயோ: விசேஷோநஹி வித்யதே" என்பதனல் ஏகாதசியில் ஆத்ய சிராத்தம் வந்தாலும் அன்று ஏகபிண்ட ப்ரதாநம் பண்ணிவிட்டு மறுதினத்தில் அந்த சிராத்தம் பண்ணத்தக்கதென்றும் பதிஞென்ருவது தினத்துக்கும் பன்ரண்டாந்தினத்துக்கும் வித்தியாஸமில்லையென்றும் ஆகைபால் பதிஞேராம்நாள் ஏகாதசியானல். பன்னிரண்டாம் நாள் ஏகோத்திஷ்டம் செய்யலாமென்றும் சொல்லியிருக்கிறுர்.

இப்படி பாரத்வாஜர், போதாயநர், ப்ருஹத்ப்ரசேதஸ் என்னும் ஸ்ம்ருதி கர்த்தாக்கள் சொல்லிய வசனங்கள் ஏகாதசி சிராத்தம் அநுஷ்டேயமன்றென்பது வ்பக்ஷம்.

மேலும் பாஞ்சராத்ரத்தில் "𑌆𑌮𑍇𑌨𑌾𑌪𑌿 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌏𑌕𑌾𑌦𑌶𑍀𑌦𑌿𑌨𑍇 ॥ 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌰𑌕𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯𑌾𑌵𑌦𑌾𑌭𑍂𑌤𑌸𑌂𑌪𑍍𑌲𑌵𑌂 ॥ 𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑌮𑌿𑌤 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌯𑌥𑌾𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌪𑌰𑍇𑌽𑌹𑌨𑌿 ॥ 𑌤𑌥𑍈𑌵 𑌏𑌕𑌾𑌦𑌶𑍀 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌮𑍇𑌵 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍" "ஆமேநாபிஹிரண்யேந ச்ராத்தம் ஏகாதசிதிநே, குர்வந்நரகமாப்நோதி யாவதாபூத ஸம்ப்லவம், க்ரஸ்தாஸ்தமித ஆதித்யே யதாச்ராத்தம் பரே அஹநி, ததைவ ஏகாதசி சிராத்தம் த்வாதச்யாமேவ காரயேத்" என்பதனால் ஆமசிராத்தமாவது ஹிரண்ய ச்ராத்தமாவது ஏகாதசியில் செய்கிறவன் ப்ரளய பர்யந்தம் நரகத்தை அடைகிறான் என்றும், சூர்யன் கிருஸ்தாஸ்தமிதனானால் அன்று செய்யவேண்டிய சிராத்தம் மறுநாள் செய்யப்படுவதுபோலவே ஏகாதசி சிராத்தமும் மறுநாள் செய்யவேண்டுமென்றும் சொல்லப்பட்டன. "𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌾𑌹𑌂 𑌸𑌤𑌿 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍" "ம்ருதாஹம்ஸமதிக்ரம்ய" என்கிற வசனம் உதாஹரிக்கப்பட்டுள்ள வசன விசேஷங்களாலே க்ரஹணம், ஏகாதசி முதலிய தினங்களில் பாதிக்கப்பட்டு அவையொழிந்த தினங்களில் சரிதார்த்தமாவதால் அது பாதகமாகாது.

சிரவண த்வாதசியில் வாமநஜயந்தி வருமாகையால் அன்று உபவாஸமிருந்து சிராத்தம் மறுநாள் செய்யவேண்டாமோ என்னில் வாமனவதாரம் பாத்ரபதமாஸத்தில் காலையில் கந்யாலக்நத்திலாகையால் உத்ஸவாந்தத்தில் பாரணம் ஏற்பட்டிருப்பதால் அன்றையதினமே போஜனம் சிராத்தம் முதலானவைகள் செய்யலாம். வ்யாஸஸம்ஹிதையில் "𑌭𑌾𑌦𑍍𑌰𑌪𑌦𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑌵𑌣𑍇 𑌤𑌥𑌾 ॥ 𑌕𑌨𑍍𑌯𑌾𑌰𑌾𑌶𑍌 𑌤𑌦𑌾 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍇 𑌜𑌾𑌤𑌶𑍍𑌰𑍀𑌵𑌾𑌮𑌨𑍋 𑌵𑌿𑌭𑍁𑌃 ॥ 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌲𑌗𑍍𑌨𑍇 𑌵𑍃𑌶𑍍𑌚𑌿𑌕𑌾𑌂𑌶𑍇 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ॥ 𑌸 𑌵𑍈 𑌵𑌾𑌮𑌨𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌵𑌿𑌭𑍋𑌃 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃 ॥ 𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕 𑌜𑌯𑌾𑌯 𑌚 ॥ 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇 ॥ 𑌤𑌜𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾

உத்ஸவாந்தே ச பாரணம்|| கார்யந்தச்ச வைஷ்ணவைஸ்ஸார்த்தம் ஹரிவாஸர விஸுத்தயே" "மாஸிபாத்ரபதே சுக்ல த்வாதச்யாம் ச்ரவணே ததா, கந்யாலக்நேது கந்யாம்சே ஜாதஸ்ரீ வாமநோ விபு:, தத்தித்யாம் வ்ருஃசிகேலக்நே வ்ருஃசிகாம்சே த்ரிவிக்ரம:, ஸஏவ வாமந: ஸாக்ஷாத் ஸர்வஸ்யாபி விபு: ப்ரபு:, தத்வத்ததாசதம் த்யாயேத் ஸர்வலோக ஜயாயச, மோக்ஷார்த்தேச விசேஷேண ஸர்வகந்த விமுக்தயே, தஜ்ஜயந்த்யர்ச்சநம் க்ருத்வா உத்ஸவாந்தேச பாரணம், குர்யாத் ஸவைஷ்ணவைஸ்ஸார்த்தம் பகவத் தர்ம்ம ஸித்தயே" என்பதனால் பாத்ரபத சிரவணத்வாதசியில் வாமநாவதாரமும் திரிவிக்ரமாவதாரமும் ஏற்பட்டனவென்றும் அந்த அவதார தினத்தில் வாமநாராதநம் பண்ணிவிட்டு உத்ஸவாந்தத்தில் வைஷ்ணவர்களோடுகூட பாரணம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே மாசி மாசம் க்ருஷ்ணபக்ஷ த்வாதசியும் சிரவண த்வாதசியானுலும் ஸ்ரீ வராஹஜயந்தி யாகையாலே இந்த ந்யாயத்தால் அன்றும் உத்ஸவாந்தத்தில் பாரணம் பண்ணவேண்டும். ஸ்ரீ ராமநவமியும் ஜயந்தியாகையால் பகலில் கடகலக்கினத்தில் உத்ஸவமாதலால் உத்ஸவாந்தத்தில் பாரணமும் சிராத்தமும் பண்ணலாம். அஹோராத்ரம் உபவாஸவிதி அவைஷ்ணவ விஷயம். நரஸிம்ஹ ஜயந்தியு மிப்படியே. இனி. வைஷ்ணவ விதவைகளின் வபநநிஷேதம் நிரூபிக்கப்படும்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(5-ம் தொகுதியின் 211-ம் பக்கத்தொடர்ச்சி.)

4-வது அதிகாரம்.

குருக்ஷேத்திரயுத்தம் எப்பொழுது நிகழ்ந்தது? இன்றைக்கு ஐயாயிர வருடங்களுக்கு முன் கலியுக ஆரம்பத்தில் மஹாபாரத யுத்தம் நடந்ததென்று நம்மவரின் கொள்கை. இது சரியான தல்லவென்று நமது க்ரந்தங்களின் மூலமாகவே நிரூபிக்கமுயல்வாம். கலியுகம் பிறந்து 953 வருடங்களான பின்பு கோநர்த்தன் காஷ்மீரத்தை அரசுபுரிந்தான். கோநர்த்தன் யுதிஷ்டிரர் காலத்திலிருந்தவன். அவன் 35 வருடம் அரசாண்டானென்று ராஜதரங்கிணி என்கிற க்ரந்தத்தில் காணப்படுகிறது.

மேலும் விஷ்ணு புராணத்தில் "𑌸𑌪𑍍𑌤𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌯𑍌
𑌪𑍂𑌰𑍍𑌵𑍌 𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌤𑍇 𑌉𑌦𑌿𑌤𑍌 𑌦𑌿𑌵𑌿, 𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂
𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌤𑍇 𑌯𑌤𑍍𑌸𑌮𑌂 𑌨𑌿𑌶𑌿, 𑌤𑍇𑌨 𑌸𑌪𑍍𑌤𑌰𑍍𑌷𑌯𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑍍𑌯
𑌬𑍍𑌦𑌶𑌤𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂, 𑌤𑍇 𑌤𑍁 𑌪𑌾𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌮𑌘𑌾𑌸𑍍𑌵𑌾𑌸𑌨𑍍
𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮 ॥ 𑌤𑌦𑌾 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌶𑍍𑌚 𑌕𑌲𑌿𑌃 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌬𑍍𑌦𑌶𑌤𑌾𑌤𑍍𑌮𑌕𑌃"
"ஸப்தர்ஷீணாம் சயௌ பூர்வௌ த்ருச்யேதே உதிதௌ திவி தயோஸ்து மத்யநக்ஷத்ரம் த்ருச்யதே சச்யமம்நிசி தேநஸப்தர்ஷயோயுக்தா: திஷ்டந்த்யப்தே சதந் ந்ருணா: தேதுபாரிக்ஷிதே காலே மகாஸ்வாஸந் த்விஜோத்தம, ததாப்ரவ்ருத்தஸ்ய கலி: த்வாதசாப்தே சதாத்மக:" 8-ம் அம்சம் 24-ம் அத்யாயம் 33, 34 சுலோகம்.

இதனதுபொருள்: ஸப்தரிஷிமண்டல மத்தியில் எவை இரண்டு நக்ஷத்ரங்கள் ஆகாசத்தில் கிழக்கில் காணப்படுகின்றனவோ அவைகளுக்குச் சமசூத்ரத்தில் எந்த நக்ஷத்ரம் காணப்படுகிறதோ அந்த நக்ஷத்ரத்திலேயே சப்தரிஷிமண்டலம் நூறு வருஷத்திற்கு நிலைத்

திருக்கும். பரீக்ஷித்தின் காலத்தில் ஸப்தரிஷிமண்டலமானது மக நக்ஷத்ரத்தில் இருந்தது. அப்பொழுது கலியுகம் ஆரம்பமாகி 1200 வருஷங்களாயின. மேலேகண்ட சுலோகப்படி கிறிஸ்து பிறப்பதற்கு 1900 வருஷங்களுக்கு முன்பு குருக்ஷேத்ர யுத்தம் நடந்ததென்று தெரிகிறது. புராண கர்த்தாக்களான ரிஷிகளின் சொற்களை யாராய்வோம். யுதிஷ்டிரர் காலத்தில் சப்தரிஷிமண்டலம் மக நக்ஷத்ரத்தில் இருந்தது. நந்தமஹாபத்மன் காலத்தில் பூர்வாஷாட நக்ஷத்ரத்தில் இருந்தது.

“𑌪𑍍𑌰𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌦𑌾𑌚𑍈𑌤𑍇
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌷𑌾𑌢𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃।
𑌤𑌦𑌾 𑌨𑌨𑍍𑌦𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌯𑍇𑌵
𑌕𑌲𑌿𑌰𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿” 114—24—39.

“ப்ரயாஸ்யந்தி யதாசைதே பூர்வாஷாடே மஹர்ஷய:, ததாநந்தாத் ப்ரப்ருத்யேவ கலிவ்ருத்திம் கமிஷ்யதி”

இதனதுபொருள்:— இம்மஹரிஷிகள் பூராடநக்ஷத்ரத்தைவிட்டு எப்பொழுது செல்கின்றனரோ அப்பொழுது நந்தராஜ்யாரம்பமுதல் கலியானவன் விருத்தியடைவான். மகம் முதல் பூராடம் 10-வது நக்ஷத்ரம். ஆகையால் யுதிஷ்டிரர்காலத்திற்குப்பின் 10 × 100 = 1000 வருடங்கள் கழித்து நந்தனது காலம். ஸ்ரீமத் பாகவதத்திலும் கீழ்க்கண்ட சுலோகம் காணப்படுகிறது. “𑌯𑌦𑌾 𑌮𑌘𑌾𑌭𑍍𑌯𑍋 𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌷𑌾𑌢𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃, 𑌤𑌦𑌾 𑌨𑌨𑍍𑌦𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌯𑍇𑌷 𑌕𑌲𑌿𑌰𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 13—2—32.

“யதாமகாப்யோபாஸ்யந்தி பூர்வாஷாடாந்மஹர்ஷய:, ததாநந்தாத் ப்ரப்ருத்யெவ கலிர்வ்ருத்திம் கமிஷ்யதி” விஷ்ணு புராணத்திலிருந்து மேலேகுறிப்பிட்ட “ப்ரயாஸ்யந்தி” என்ற சுலோகத்திற்கு முன் சுலோகம் பின்வருமாறு காணப்படுகிறது.

𑌯𑌾𑌵𑌤𑍍 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮
𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌨𑍍𑌦𑌾𑌭𑌿𑌷𑍇𑌚𑌨𑌂
𑌏𑌤𑌦𑍍𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑍁
𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍋𑌤𑍍𑌤𑌰𑌂

நந்தனுடைய முழுப்பெயர் நந்தமஹாபத்மன். விஷ்ணுபுராணத்தில் இதே நான்காவது அம்சத்தின் இருபத்துநான்காவதத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"𑌮𑌹𑌾𑌪𑌦𑍍𑌮𑌸𑍍𑌤𑌤𑍍 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚
𑌏𑌕𑌂 𑌵𑌰𑍍𑌷𑌶𑌤𑌮𑌵𑌨𑍀𑌪𑌤𑌯𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿
𑌨𑌵𑍈𑌵 𑌤𑌾𑌨𑍍 𑌨𑌨𑍍𑌦𑌾𑌨𑍍 𑌕𑍌𑌟𑌿𑌲𑍍𑌯𑌃
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿
𑌤𑍇𑌷𑌾𑌮𑌭𑌾𑌵𑍇 𑌮𑍌𑌰𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌭𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿
𑌕𑍌𑌟𑌿𑌲𑍍𑌯 𑌏𑌵𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌗𑍁𑌪𑍍𑌤𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌽𑌭𑌿𑌷𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿"

இதன்பொருள்:—மஹாபத்மனும் அவன் புதல்வர்களும் ஒரு நூறுவருடம் அரசர்களாயிருப்பார்கள். கௌடில்யனெனப் பெயர் வாய்ந்த பிராம்மணன் நந்தர்களை நாசஞ்செய்வான். அவர்கள் அழிந்தபின் மௌரியர்கள் பூமியையநுபவிப்பார்கள். கௌடில்யனென்னும் பிராம்மணன் சந்தரகுப்தனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்வான் என்பதாம்.

ஆகையால் யுதிஷ்டிரர்காலத்திலிருந்து 1115 வருடங்களுக்குப் பின் சந்திரகுப்தன் பெயர்பெற்ற சக்கிரவர்த்தியாயிருந்தான். இவனே அலெக்ஸாண்டர் காலத்தவன். ஸெல்யூகஸ் எனபவனை யுத்தத்தில் தோற்கடித்து அவன் பெண்ணை விவாகம்செய்துகொண்டவன் சந்திரகுப்த்தனே. அலெக்ஸாண்டர் 8. கி. மு. 325 வருஷத்தில் இந்நாட்டைப்படையெடுத்தான்.

சந்திரகுப்த்தன் கி. மு. 315 வருஷத்தில் ராஜ்யம்பெற்றான் ஆகையால் இந்த 315 எண்ணுடன் மேலே காணப்பட்ட 1115 எண்ணையுஞ்சேர்த்தால் அதாவது கி. மு 1430 வருடத்தில் மஹாபாரதயுத்தம் நடந்தது. மற்றப்புராணங்களிலும் இவ்விதமான கதைகள் காணப்படுகின்றன.

மத்ஸ்யபுராணத்திலும் வாயுபுராணத்திலும் 1115க்குப் பதிலாக 1150 என்றெழுதியிருக்கிறது. அதிலிருந்து 1465 வருடம் கிடைக்கிறது.

வருஷத்தில் இரண்டு நாட்களிலேயே இரவும் பகலும் ஒரேயளவாயிருக்கின்றதென்று யாவருக்குந்தெரிந்த விஷயம் இவைகளை

விஷுவென்று சொல்வார்கள் ஆகாசத்தில் எந்தெந்த இடத்தில் சூரியன் உதயாஸ்தமகாலத்தில் காணப்படுவானோ அந்தந்த இடங்களை க்ராந்திபாதம் அல்லது க்ராந்திபாதபிந்துவெனச் சொல்லுவார்கள். இவைகளுக்குச் சரியாக 90 அம்சங்களுக்குப் பின்னால் அயனபரிவர்த்தனம் காணப்படுகிறது. இந்த 90 அம்சத்திலிருந்துதான் சூரியன் தக்ஷிணாயனத்திலிருந்து உத்தராயணத்திற்கும் உத்தராயணத்திலிருந்து தக்ஷிணாயனத்திற்கும் செல்வான்.

பீஷ்மருக்குத் தான் கருதியபடி மரணமென்று மஹாபாரதத்தில் சொல்லியிருக்கிறது. அவர் '𑌶𑌰𑌶𑌯𑌨' 'சரசயன'த்திலிருந்தபடியே தனக்குத் தக்ஷிணாயனத்தில் மரணங் கிடையாதென்று சொல்லி உத்தராயணத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். மாக மாதத்தில் உத்தராயணம் ஆரம்பமானபிறகு அவர் உயிர் துறந்தார். பீஷ்மர் பிராணனை விடுவதற்கு முன்பு சொல்லியிருக்கிறார்.—

"𑌮𑌾𑌘𑍋𑌽𑌯𑌂 𑌸𑌮𑌨𑍁 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃
𑌮𑌾𑌸𑌸𑍍𑌸𑍌𑌮𑍍𑌯𑍋 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰"

"மாகோயம் ஸமநு ப்ராப்த:
மாஸஸ்ஸௌம்யோ யுதிஷ்டிர"

ஆகையால் அக்காலத்தில் உத்தராயணம் மாகமாதத்தில் ஆரம்பமாயிற்று. பீஷ்மரின் மரணகாலத்தில் மாகமாதத்தில் உத்தராயணம் வந்தது. ஆனால் ஸௌரமான மாகமாதத்தில் எவ்வளவு நாள்களிருந்தனவென்று சொல்லப்படவில்லை. ஒவ்வொரு '𑌪𑍌𑌷𑌮𑌾𑌘' 'பௌஷமாக' மாசத்திலும் 28 அல்லது 29 நாட்கள் காணப்படுகின்றன. இவ்விருமாசங்களையும் சேர்த்து 57 நாள்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ்விதம் வான சாஸ்த்ரத்தின் கணக்குப்படி பார்த்தால் கி. மு. 1430 வருடங்களுக்கு முன்பு மகாபாரதத்தின் யுத்தம் நடந்ததென்று தெரிகிறது. இவ்விதமான பிரமாணங்களைப் பார்த்தபிறகு மகாபாரத யுத்தம் த்வாபர யுகத்தினிறுதியில் இற்றைக்கு ஐயாயிர வருஷங்களுக்கு முன்பு நிகழ்ந்ததென்று எவர் நம்புவார்?

தொடரும்.